**மூலதன வரவு-செலவு திட்டம்** (Capital Budget)

- அரசு செய்யும் செலவுகளில் பெரும் பகுதி மூலதன செலவுகள் ஆகும். மூலதன வரவுகள் மற்றும் மூலதன செலவுகள் ஆகியன மூலதன பட்ஜெட்டில் அடங்கும். அங்காடிக் கடன்கள், RBI யிடம் இருந்து பெறும் கடன்கள், கருவூல உண்டியல்கள், அயல்நாட்டு அரசுகள், நிறுவனங்கள் போன்றவற்றிலிருந்து பெறுகின்ற கடன்கள் ஆகியன அரசின் மூலதன வருவாய்களாகும். அரசுக்கு சொந்தமாக நிலம், கட்டிடம், இயந்திர தளவாடங்கள் வாங்குதல், முதலீடுகள் மற்ற அரசு கம்பெனிகளுக்கும் மாநில அரசுகளுக்கும் வழங்கப்படும் கடன்கள் போன்றவை மூலதன செலவினங்களில் அடங்கும்.

**செயல் திறன் வரவு செலவு திட்டம்**(Performance Budgeting)

- அது அரசாங்கத்தின் பொது செலவினங்களை சார்ந்த பணிகள், காரியங்கள், செயல் வடிவங்கள், திட்டங்கள், நடவடிக்கைகள் ஆகியவற்றை உள்ளடக்கி அரசு மேற்கொள்ளும் அடிப்படையான அரசின் செலவினங்களை பிரதிபலிக்கிறது.

**பூஜ்ய வரவு செலவு திட்டம்** (Zero Budget)

- இதில் ஒவ்வொரு ஆண்டும் ஒரு புதிய ஆண்டாக எடுத்துக் கொள்ளப்படும். கடந்த சில நிகழ்வுகளை கணக்கில் எடுத்துக் கொள்வதில்லை. இத்திட்டம் பூஜ்யத்தை அடிப்படையாகக் கொண்டு முழுமையானதாகவும் புதியதாகவும் எடுத்துக் கொள்ளப்படுகிறது.

## நிதியியல் கொள்கை (Fiscal Policy)

- இந்தியாவில் நிதித்துறை அமைச்சகம் நாட்டின் நிதிக் கொள்கையை முடிவு செய்கிறது. பட்ஜெட் எனப்படும் ஆண்டு வரவு செலவு அறிக்கையே நாட்டின் நிதிக்கொள்கையை எடுத்துக்காட்டும் முக்கிய அம்சமாகும். நாட்டுக்கு வரக்கூடிய பல்வேறு வருமானங்கள் "அரசியல் அமைப்பு சட்டத்தின் 266 வது" உறுப்புப்படி அமைந்துள்ள திறள் நிதியில் வரவு வைக்கப்படுகின்றன. இந்த பணத்தை செலவளிக்க பாராளு மன்றத்தின் ஒப்புதல் பெறவேண்டும். இதற்காக அரசியலமைப்புச் சட்ட உறுப்பு 112 ன் படி ஆண்டு நிதிநிலை அறிக்கை நிதியமைச்சரால் ஒவ்வொரு ஆண்டும் மக்களவையில் தாக்கல் செய்யப்படுகிறது.

## நிதிக் கொள்கையின் நோக்கங்கள்

1. வளங்களை திரட்டி பொதுத்துறையில் நிதி ஆதாரங்களை பெருகச் செய்தல்.
2. தனியார் துறையை வளர்ச்சி அடையச் செய்தல்.
3. வளங்களை உத்தம அளவில் பயன்படுத்துதல்.
4. பணவீக்கத்தை கட்டுப்படுத்தி பொருளாதாரத்தை நிலைப்படுத்துதல்.
5. வருமானம் சொத்துப் பகிர்வில் உள்ள ஏற்றத் தாழ்வுகளைக் குறைத்தல்.
6. முழு வேலைவாய்ப்பை அடைதல் மற்றும் பொருளாதார வளர்ச்சி.
7. நிதிக் கொள்கையும் மூலதன ஆக்கமும்.

## நிதிகளின் வகைகள் (Kinds of Funds)

1. இந்திய திரள் நிதி (Consolidated Fund of India)
2. இந்திய அவசர கால நிதி (Contigency Fund of India)

### I. இந்திய திரள் நிதி

- இதில் நாட்டின் வருவாய்கள் அனைத்தும் வரவு வைக்கப்படும். இதிலிருந்து செலவளிக்கப்படும் செலவினங்கள் மானியக் கோரிக்கை களாக மக்களவையில் நிறைவேற்றப் படுகிறது. ஓட்டெடுப்பின்றி திரள் நிதியில் நேரடியாக சேர்க்கப்படும் செலவினங்களை சாட்டப்பட்ட செலவினங்கள் (Charged Expenditure) என்கிறோம். குடியரசு தலைவர், உச்ச, உயர் நீதிமன்ற நீதிபதிகள் (இரண்டாம் அட்டவணையில் குறிப்பிடப்பட்டபடி) ஊதிய செலவினங்கள் வழங்குவதற்கு மக்களவையில் ஓட்டெடுப்பு நடத்தத் தேவையில்லை.

### 2. இந்திய அவசரகால நிதி

- எதிர்பாராத அவசர செலவுகளுக்கு குடியரசு தலைவர் அவசரகால நிதியிலிருந்து பணம் வழங்குவார். அவசர கால நிதியிலிருந்து பெறப்பட்ட பணம் பாராளுமன்றத்தின் திரள் நிதியிலிருந்து பெறப்பட்டு அவசரகால நிதிக்கு அளிக்கப்படுகிறது.



## நிதிப்பொறுப்பு மற்றும் நிதி நிர்வாக மேலாண்மைச் சட்டம், 2003 FRBM (Fiscal Responsibility and Budget Management) Act, 2003

**சிறப்பியல்புகள்:**

- அரசுநிதி மற்றும் வருவாய் பற்றாக்குறையை போக்குவதற்கு 31 மார்ச் 2008குள் நடவடிக்கை எடுக்க வேண்டும். அதன் பிறகு வருவாய் உபரியாக மாற்ற வேண்டும்.
- இச்சட்டத்தின் கீழ் விதிகளை வகுத்து வருடாந்திர இலக்குகளை நிர்ணயிக்க வேண்டும். அதில் நிதிப்பற்றாக்குறையை 0.3 சதவீதமாகவும், வருவாய் பற்றாக் குறையை 0.5 சதவீதமாகவும் குறைக்க வேண்டும்.
- தேசியபாதுகாப்பு மற்றும் பேரிடர் அல்லது விதிவிலக்கான காரணங்கள் போன்ற காலங்களில் நிதி மற்றும் வருவாய் பற்றாக்குறையானது இலக்குகளைத் தாண்டிச் செல்லலாம்.
- RBI-யிடமிருந்து குறிப்பிட்ட வழி மற்றும் முறைமுன் பணம் (Ways and Means Advances) (WMAs) வழிகளை தவிர அரசுகடன் பெறக்கூடாது.
- 2006-07லிருந்து அரசுபத்திரத்தை RBI யிடமிருந்துபெறாமல் சந்தையில் பெறுவது.
- நிதிசார்ந்த செயல்பாடுகளில் அதிக வெளிப்படைத் தன்மையை உறுதிபடுத்த வேண்டும்.
- ஒவ்வொரு நிதியாண்டிலும் அரசு நாடாளுமன்றத்தில் நிதிநிலையறிக்கை, மானியக் கோரிக்கை இவற்றுடன் கீழ்வரும் மூன்று அறிக்கையும் அளிக்க வேண்டும்.

1. நிதிக் கொள்கையுக்தி அறிக்கை (FPSS- Fiscal Policy Strategy Statement)
2. இடைக் காலநிதிக் கொள்கை அறிக்கை (MTFPS – Medium Term Fiscal Policy statement).

**அட்டவணை 4.2 : நிதிப் பற்றாக்குறையை நீக்க இந்திய அரசின் இலக்கு**

| | செயல்பாடு 2015-16 நிதிநிலை அறிக்கையில் இலக்கு | அக்டோபர் 2012ன் இலக்கு | FFC இலக்கு நிர்ணயம் |
|---|---|---|---|
| 2014-15 | 4.1% | 4.2% | 4.1% |
| 2015-16 | 3.9% | 3.6% | 3.6% |
| 2016-17 | 3.5% | 3.0% | 3.0% |
| 2017-18 | 3.0% | NA | 3.0% |

- சமீபத்தில் நிதி செயல்பாடுகளிலிருந்து இந்தியா கற்றுக்கொண்ட பாடம் என்ன?
- மொத்த உள்நாட்டு உற்பத்தியில் நிதிப்பற்றாக்குறையின் இடைக்கால இலக்கான 3 சதவீகிதத்தை இந்தியா அடைய வேண்டும். வருவாய் பற்றாக்குறையை நீக்குதல் என்ற நிலையை உருவாக்கி கடன் வாங்குதல் என்பது முதலீட்டு திரட்டிற்காக மட்டுமே என்ற நிலையை உருவாக்குதல்.
- இவ்விலக்குகளை அடைய செலவீனக் கட்டுப்பாடு மற்றும் நுகர்வு செலவீனத்திலிருந்து முதலீடாக மாற்ற வேண்டும்.
- இறுதியாக குறைந்த மற்றும் இடைக்கால நிதி இலக்குகளை அடைய பெட்ரோலிய பொருட்கள் மீதான வரியை அதிகரித்து மொத்த உள்நாட்டு உற்பத்தியில் வரியின் விகிதத்தை அதிகரித்தல்.